சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | கஜேந்திரன் |
| தந்தை பெயர் | : | சின்னகண்ணு |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 32 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர்

ஆவேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 01.06.2025 ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு பைங்காநாடு கிராமம், மெயின் ரோட்டில் உள்ள மது கடையில் நான் மது வாங்குவதற்காக சென்று மது வாங்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தேன். மது கடைக்கு அருகில் வந்த ஆஜர் எதிரி பிரபாகரன் என்னை பற குச்சிகாரி மகனே, தேவடியா மகனே, உனக்கு இங்கு என்ன வேலை என்று கூறி உதைத்து தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். எனது இடுப்பில் அடிபட்டுவிட்டது. அப்போது பாஸ்கர் மற்றும் விஜயன் ஆகியோர்கள் வந்து எதிரியை மறைத்தார்கள். அதன் பின்னர் அங்கு வந்தவர்கள் எனது அண்ணன் மகன் மணிகண்டன் என்பவரிடம் சொல்லி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது திருமக்கோட்டை போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்த விவரம் சொன்னேன். அவர்கள் எழுதிக்கொண்டு கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் என்னை மன்னார்குடி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள். விவரம் சொன்னேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

முதல் விசாரணையில் சொல்லி சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சாதாரணமாக பைங்காநாடு கிராமத்திலிருந்து மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் வந்தால் 15 நிமிடத்தில் வந்துவிடலாம் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினமும் சிகிச்சைக்காக இரு சக்கர வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு வந்தேன் என்று சொன்னால் சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் நடந்த இடம் பைங்காநாடு மெயின் ரோடு என்றால் சரிதான். மது கடை

வாசலில் தான் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் நடந்தது என்று சொன்னால் சரிதான். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சாதாரணமாக இரவு நேரங்களில் பைங்காநாடு மது கூடம் எப்போதும் கூட்டமாகவே இருக்கும் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றும் கூட்டமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். சத்தம் கேட்டபிறகு தான் பாஸ்கர் மற்றும் விஜயன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். பாஸ்கர் மற்றும் விஜயன் வந்த பிறகு எனது அண்ணன் மகனிடம் என்னை அழைத்து சென்றார்கள் என்று சொன்னால் சரிதான். எனது அண்ணன் மகன் பெயர் மணிகண்டன் என்றால் சரிதான். எனது அண்ணன் மகனிடம் அழைத்து சென்ற பிறகு நான் மற்றும் எனது அண்ணன் மகன் ஆகியோர் கலந்து ஆலோசித்து புகார் கொடுக்க வேண்டும் என்று மருத்துவமனையில் முடிவு செய்தோம் என்று சொன்னால் சரிதான். நான் போலீசாரிடம் எதிரியுடன் மேலும் 4 நபர்கள் வந்து தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதே போல் அந்த 4 நபர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்ற விவரத்தை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மன்னார்குடி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் என்னை எதிரியுடன் வந்த 4 நபர்கள் தாக்கவில்லை என்றும், நான் தவறுதலாக 4 நபர்கள் எதிரியுடன் என்னை சேர்ந்து தாக்கியதாக கூறியிருந்தால் அது தவறு. சம்பவத்தின் போது மது போதையில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது சரியல்ல என்றும், சம்பவத்தின் போது நான் மது போதையில் இருந்ததாக மருத்துவர் எனக்கு சான்று வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே விளம்பர பலகை வைப்பது தொடர்பாக எனக்கும் எதிரிக்கு மன வருத்தம் இருந்ததா என்றால் இல்லை. எனக்கு மேற்படி சம்பவத்தின் காரணமாக வெளிபுற காயம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போலா எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும்,

நான் தான் மது போதையில் எதிரியுடன் பிரச்சனை செய்தேன் என்றும், எதிரி என்மீது புகார் கொடுத்துவிடுவார் என்பதால் எதிரியின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரியை தொடர்பு படுத்தி எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எதிரி என்னை எவ்விதமான சமூக வார்த்தைகளை கொண்டு திட்டவில்லை என்றாலும், வழக்கை வலுபடுத்துவதற்காக ஒரு பொய்யான புகார் என்னால் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.02 17:45:02 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.